Training Institutes run by the Women's Welfare Department.

* 191. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken to provide employment to the adult trainees from the Training Institutes run by the Women's Welfare Department?

மகளிர் நலத் துறையால் நடத்தப்படும் (தொழிற்) பயிற்சி நிலையங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மகளிர் நலத் துறையால் நடத்தப்படும் (தொழிற்) பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுத் தேறி வரும் வயது வந்த பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சமூகப் பொருளாதார நிலையில் பிற்பட்டுள்ள மகளிருக்குச் சிறு கைத்தொழில்களில் முனைப்பான பயிற்சியளிக்கும்பொருட்டு, மகளிர் நலத்துறை பணிநிலையங்களை நடத்துகிறது. இந்தப் பணி நிலையங்களில் மூன்று அல்லது நான்கு தொகுதியினருக்குப் பயிற்சியளித்த பின்னர், அங்குப் பயிற்சி பெற்ற மகளிரை வேலைக்கு நியமிப்பதன் மூலம் அவற்றை உற்பத்திப்பிரிவுகளாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றையும் மகளிர் நலத் துறை தொடங்கியுள்ளது.

Special Care and Rehabilitation Homes.

* 192. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the total number of Special Care and Rehabilitation Homes in the State; and

(*b*) the facilities provided to the inmates at these Homes?

சிறப்புக் காப்பு-புதுவாழ்வு இல்லங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைசசர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள சிறப்புக் காப்பு-புதுவாழ்வு இல்லங்களின் மொத்த எண்ணிக்கை யாது ?